1990 மே, 21

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் 1972 முதல் 1984 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மொத்தம் 3,567 பேர்கள். இதில் 1,112 பேர்களுக்கு மட்டும்தான் 15 நாள் வீதம் பணிக்கொடை கணக்கிட்டுக் கொடுக்கவில்லை என்று தொழிலாளர் ஆய்வுத் துறையினரிடம் முறையிட்டு, முறையாக நிர்வாகத்தினரை அழைத்துப் பேசப்பட்டது. அந்த ஆய்வுத் துறையினர் இவர்களுக்கு பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள். மறுபடியும் நிர்வாகம் மேல் முறையீடு செய்தது. அந்த மேல் முறையீட்டிலும் ஏற்கெனவே சொன்ன தீர்ப்புதான் உறுதி செய்யப்பட்டது. மேல் முறையீட்டிலும் 1972 முதல் 1984 முடிய உள்ளவர்களுக்குப் பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு கூறிய பிறகு, நிர்வாகம் அதை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறது. அது கோர்ட்டில் தாவாவாக இருக்கிறது. அதன் பிறகு 1986-லிருந்து 1987 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கும் தாவா அரசு அதிகாரிகள் முன்பு நடத்தப்பட்டு, அவர்களுக்கும் பணிக்கொடை சட்டத்தின் கீழ் பணம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டு இருக்கின்றது. அதை எதிர்த்தும் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். இந்தமாதிரி நடவடிக்கை எடுத்தாலும் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று வாதாடுகின்ற காரணத்தால், உடனடியாக அரசினால் தொழிலாளிகளுக்கு எந்த நியாயமும் வழங்க முடியவில்லை. இருந்தும், அதன் பிறகு நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவி அருணன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக பல்வேறு முறை நிர்வாகத்தினரை அழைத்துப் பேசப்பட்டது. கடைசி முறையாக அழைத்துப் பேசப்பட்டபோது நிர்வாகத்தினர் அதில் கலந்துகொள்ள வில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தகுந்த ஆதாரங்களுடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசி ஆலைத் தொழிலாளர்கள்.

*5645 **திரு. பி. மாரப்பன் :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள சிறிய, பெரிய அரிசி ஆலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சுமார் 150 சிறிய பெரிய அரிசி ஆலைகள் உள்ளன. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் எல்லாம் தினசரி கூலிகளாகத்தான் இருக்கின்றார்கள். தொழிலாளர் நலச் சட்டத்தின் மூலமாக அவர்களுக்கு எந்தவிதமான பெனிஃபிட்டும் கிடைப்பதில்லை. அதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதிய திட்டத்தின்கீழ் அரிசி ஆலையில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் அடங்குவார்கள். 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம், 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம், 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் சட்டம், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் போன்ற சட்டங்கள் இவர்களுக்குப் பொருந்தும். மேலும், இந்தச் சட்டங்களை இயற்றும் பொழுது மின் ஆற்றல் இருக்கின்ற அரிசி ஆலைகளிலே பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தாலும், மின் ஆற்றல் இல்லாத அரிசி ஆலைகளிலே 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தால்தான் இந்தச் சட்டங்கள் பொருந்தும் என்று முதலிலே அரசு ஆணைக் குறிப்பிலேயிருந்தது; பிறகு மற்ற குறைந்த ஊழியர்கள் இருந்தால்கூட அதற்கு என்று ஒரு அறிவிக்கை அரசின் மூலமாகப் போடப்பட்டிருக்கின்றது. 85 (1)-இன் கீழ் மற்றவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்ற அளவிலே அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-55 மணி

திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக பெரியார் மாவட்டத்திலே இந்த அரிசி மில் தொழிலாளர்கள் எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் இப்பொழுது தெரிவிப்பார்களா என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவிற்குக் கேள்வியைக் கேட்பார்களேயானால், பெரியார் மாவட்டத்தில் இந்த அரசின் நடவடிக்கை மூலம் எவ்வளவு பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்று தனியாகக் கேட்க வேண்டும். பொதுப்படையாக அந்த ஊழியர்களுக்கு அரசு சட்டம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.